## தமிழீழ கட்டுமான நிதி 2001

வெற்றிக்கான கூட்டுழைப்பு



# ‘அக்னிகீல’ முறியடிப்புச் சமர்

## — ஒரு பதிவும் மறுபார்வையும் —

‘பெரும் உயிர்ச் சேதத்தாலும் தோல்வியாலும் அவமானப்பட்டு நிற்கும் எதிரியானவன் தனது ஆக்கரமிப்பு நடவடிக்கையை மீண்டும் மீண்டும் மிகவும் மூர்க்கத்தனமாக முன்னெடுக்க முயற்சிப்பான். எனவே நாம் விழிப்புடனிருந்து, எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். எமது மண்ணையும் எமது மக்களையும் பாதுகாத்து தேச விடுதலை என்ற இலட்சியம் நோக்கி நாம் உறுதி தளராது செயற்படுவோம்.’

*தீச்சுவாலை-1 முறியடிப்புச் சமர் வெற்றி நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

*(06-05-2001)*



JAFFNA AND KILINOCHCHI DISTRICTS
INDIAN OCEAN
Palk Straight
JAFFNA DISTRICT
KILINOCHCHI DISTRICT
MULLAITTIVU DISTRICT
MANNAR DISTRICT
JAFFNA
KILINOCHCHI
Jaffna Lagoon
Lagoon
ELUVATIVU
ANALATIVU
KAYTS
NAINATIVU
PUNKUDUTIVU
MANDAITIVU
DELFT
PALAITIVU
ERUMAITUVU
KAKKATIVU
IRANATIVU NORTH
IRANATIVU SOUTH
Devil's Point
Point Pedro
Chalai
India
Gulf of Mannar
Thamil Eelam
Sri Lanka
N

# ‘தீச்சுவாலை’

## படை நடவடிக்கை குறித்து கேணல் தீபன் விளக்கம்



நான்கு மாத கால திறமையான பயிற்சிகளும் சிங்களத்தில் அதி உயர் வலுக்கொண்ட 15 ஆயிரம் இராணுவத்தினர் கடல் வான் படைகளின் தக்க பலத்துடன் டாங்கிகள் ஆட்லறிகள் பல குழல் எறிகணைச் செலுத்திகளின் கூட்டாதரவோடு மேற்கொண்ட சிறிலங்காவின் தீச்சுவாலை படை நடவடிக்கையை தேசியத் தலைவர் அவர்களின் சிறப்பான திட்டமிடலில் செயற்பட்டு வெற்றிகரமாக முறியடித்தோம் என தீச்சுவாலை முறியடிப்பு மற்றும் தற்காப்பு சமரை ஒருங்கிணைத்து நெறிப்படுத்திய தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

கண்டிவீதியின் கிழக்குப் புறமாக கடலேரி கண்டல் வரையான பகுதிகளில் 55 ஆம் டிவிசனின் இராணுவ அணிகள் முன்னேறின. பின்னணியில் ஆட்லறிகள் மோட்டார்கள் பல குழல் எறிகணைச் செலுத்திகள் குண்டுகளை ஆயிரக்கணக்கில் மழை போல் பொழிந்து கொண்டிருந்தன. 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை வான் படையின் மிகையொலி வேக விமானங்கள் புதிது புதிதாக வந்து பாரிய குண்டுகளை வீசின.

பன்னீராயிரம் படையினர் 8 கிலோமீற்றர் அகலமான கண்டல் முதல் கிளாலி கடல்நீரேரி வரையான பகுதிகளில் நகர்ந்தன. 3000 படைகள் பின்னணிச் செயற்பாடுகளை மேற்கொண்டன.

நான்கு மாத கால சிறப்பு பயிற்சிகளுடன் டாங்கிகள் சகிதம் இராணுவம் விடுதலைப்புலிகளின் நிலைகளைக் கடந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் நகர்ந்திருந்தது. கிளாலிக் கரையோரமாக சிறிலங்கா கடற்படை கலங்கள் எஸ்.எல் பிரிகேட் படையினருக்கு ஆதரவாக தாக்குதலை நடத்தின.

இத்தகைய எதிரியின் பலமான நகர்வுக்கு எதிரான தற்காப்பு சமரையும் முறியடிப்புச் சமரையும் இந்த கள முனையில் இருந்த விடுதலைப்புலிகளின் அணிகள் வலுவுடன் மேற்கொண்டு எதிரிக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தி வெற்றிகரமாக

முறியடித்தன. இந்த முறியடிப்புச் சமரில் கிளாலியில் இருந்து நகர்ந்த கொமாண்டோ படைகளையும் கண்டல் கடலேரிப்பகுதி ஊடாக நகர்ந்த 55 ஆம் டிவிசனின் ஒரு பகுதி படைகளையும் சோதியா படையணி எதிர்கொண்டு பலத்த தாக்குதல்களை நடத்தியது.

இப்படையணியினர் எதிரிக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தினர். கண்டல் கடலேரி ஊடாக நகர்ந்த படைகளை எதிர் கொண்ட தாக்குதலில் படை தரப்புக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்திய சோதியாப்படையணியின் லெப்ரினன் கேணல் சுதந்திரா உட்பட பலர் உயிரிழந்துள்ளனர்.

கண்டிவீதியுடன் மேற்கு பகுதியில் நகர்ந்த 55 ஆம் டிவிசன் இராணுவத்தின் மீது தற்காப்பு மற்றும் முறியடிப்பு சமரை சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி நடத்தியது. கண்டிவீதி அருகுப் பகுதியில் நகர்ந்த படைகளுக்கு எதிராக மாலதி படையினர் தீரமிகு தாக்குதலை நடத்தினர்.

கிளாலியை அடுத்த கரையோரமாக நகர்ந்து முன்னேறிய 53 ஆம் டிவிசன் படைகளுக்கு எதிராக எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் உறுதியுடன் எதிர்கொண்டு எதிரிக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தினர். 8 கிலோமீற்றர் முன்னணி சமர்க்களப்பகுதி லெப்ரினன் கேணல் கோகுலன், லெப்ரினன் கேணல் தூர்கா, லெப்ரினன் கேணல் வீரமதி, லெப்ரினன் கேணல் லோறன்ஸ், லெப்ரினன் கேணல் சுதந்திரா ஆகியோரால் வழிநடத்தப்பட்டது. மாலதி படையணியை அதன் சிறப்புத் தளபதி விதுசா நெறிப்படுத்தினார்.

எல்லைப்படை சிறப்பு எல்லைப்படை என்பவற்றை கட்டா வழிப்படுத்தினார் என சமர் முறியை ஒருங்கிணைப்புச் செய்த கேணல் தீபன் தெரிவித்தார்.

முன்னணி முனைகளுக்கு அடுத்த கட்ட முனையை தளபதி கேணல் பால்ராஜ் நெறிப்படுத்தினார். எதிரிக்கு எதிரான துல்லியமான பீரங்கித் தாக்குதல்களைக் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி சிறப்பு தளபதி கேணல் பானு நெறிப்படுத்தினார்.

கடற்படையினருக்கு எதிரான தாக்குதல்களை தளபதி அறிவு தலைமையிலான கடற்புலிகள் அணி நடத்தியது. களமுனையில் இருக்கின்ற பலத்தைக் கொண்டு எதிரியை ஆனையிறவு பெருங்களவுப் படை நடவடிக்கையான தீச்சுவாலையை உடைத்து அழித்தோம் என தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிக்கு முக்கியமான காரணம் எமது தலைவர் அவர்களின் சிறந்த திட்டமிடலும் அந்த திட்டத்திற்கு அமைய இந்த சமரில் போராளிகள் பொறுப்பாளர்கள் தளபதிகள் ஆகியோரின் செயற்பாடுகள் சரியாக அமைந்திருந்ததே ஆகுமென தீச்சுவாலை முறியடிப்பை எதிரிக்கு எதிரான துல்லியமான சூடுகளை வழங்கிய பீரங்கிப்படைப் பிரிவுகளை நெறிப்படுத்திய கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

பதினையாயிரம் படையினரையும் கடல் வான் படைகளையும் சிறிலங்கா இராணு

வத்தின் பெரும் பலமும் கொண்ட தீச்சுவாலையை எமது தலைவர் அவர்களின் திட்டத்திற்கு அமைய செயற்பட்டு வெற்றி கொண்டோம் எனவும் முறியடிப்பு சமரை ஒருங்கிணைப்பு செய்த தளபதி தீபன் தெரிவித்தார்.

இந்த சமரில் 400க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர் 2000க்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். இரண்டு டாங்கிகள் ஒரு எம்.ஐ—24 உலங்கு வானூர்தி என்பன சேதமாக்கப்பட்டன.

படையினரால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் பீரங்கி குண்டுகள் பல குழல் எறிகணைகள் விமானக்குண்டுகள் என்பன 60 மணி நேர தீச்சுவாலை மற்றும் முறியடிப்பு சமர்க்காலத்தில் வீசப்பட்டன எனவும் கேணல் தீபன் தெரிவித்தார்.

## பளைப்பிரதேசத்தில் கட்டிடங்கள் முற்றாக அழிந்துள்ளன

*(Tamilnet - May 2001 20:47:07 GMT)*

தீச்சுவாலை படை நடவடிக்கையின் போது சிறிலங்கா படையினரின் மிகையொலி வேக விமானங்களினதும் ஆட்லறி பலகுழல் எறிகணைகளினதும் சரமாரியான தாக்குதல்களால் பளைப்பிரதேசக் கட்டிடங்கள் யாவும் சேதமாகியும் முற்றாக அழிந்தும் உள்ளன.

விமான குண்டுத் தாக்குதல்களால் பளை மருத்துவமனை, பளை உதவி அரச அதிபர் அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகம் மற்றும் பளை தபாலகம் என்பன முற்றாக சேதமாகிக் காணப்படுகின்றன.

அத்துடன் அங்குள்ள வீடுகள் யாவும் அழிந்தும் சேதமாகியும் உள்ளன. பெரும்பாலான தென்னந்தோப்புக்கள் விமானங்களின் குண்டுகளால் அழிந்துள்ளன. விமானங்களின் குண்டுகள் ஒவ்வொன்றும் 100 சதுர மீற்றர் அளவு பரப்புடைய நிலத்தை தோண்டி 30 அடிக்கும் மேலான ஆழத்தில் குழிகளை ஏற்படுத்தியுள்ளன.

ஒவ்வொரு குழியிலும் நீர் சுரந்து காணப்படுகிறது. வீதிகள் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் சேதமாகியுள்ளன. வீதியின் நடுவிலும் விமானக் குண்டுகள் வீழ்ந்து வெடித்து பாரிய குழிகளை தோண்டியுள்ளன.

படையினரின் எறிகணை வீச்சில் பளை நகரத்தின் சந்தைக்கட்டிடம் கடுமையான சேதங்களைச் சந்தித்துள்ளது. தீச்சுவாலை படை நடவடிக்கையில் சிறிலங்காப் படைகளின் தாக்குதல்களால் பளை பிரதேசமே சுடுகாடாக காட்சியளிக்கின்றது.

# அக்னி கீல மீதான பதிலடி

## உலக மரபுவழி போரியலில் புலிகள் படைத்த புதிய தந்திரோபாயம்

யாழ்ப்பாணப் படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களும், அவர்களுடைய அமெரிக்க மற்றும் பிரித்தானிய படைத்துறை ஆலோசகர்களும், கடந்த ஐந்தாறு மாதங்களாக ஒன்றைத் திடமாகக் கூறிவந்தார்கள். அதாவது, களமுனையில் புலிப்படைகளுடன் நேருக்கு நேர் மோதுவதென்பது. சிறிலங்கா படைகளுக்கு சிக்கலாக இருந்தாலும், வான் படை பலமும், பல்குழல் எறிகணைவீசி, பீரங்கி என்பவற்றின் வலுவை மட்டும் கொண்டு, ஆனையிறவு வரை செல்லலாம் என்பதே அவர்களின் கூற்று.

ஏற்கனவே பல சண்டைகளில், பெரும் வான்படை குண்டுவீச்சு வலுவையும், பீரங்கி சூட்டாதரவையும் நம்பி, முன்னேறிச் சென்ற சிறிலங்காவின் காலாட்படைகளும், அதிரடிப்படைகளும், புலிகளின் வழிமறிப்புத் தாக்குதல்களுக்கு உள்ளாகி, சின்னாபின்னமாகிய பல சம்பவங்களை நீங்கள் அறிந்துள்ளீர்கள். கடந்த நவம்பர் மாதம் சிறிலங்கா படைத்துறை ஆனையிறவை நோக்கிய படையெடுப்புக்குத் தயார் செய்து கொண்டிருந்த வேளையில் இரண்டு கேள்விகள் எழுந்தன.

1. எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள், வான்படை தாக்குதல்கள் என்பவற்றை ஒரு குறிப்பிட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பொழிந்த பின்னர், முன்னேறிச் செல்லும் படையினருடன், புலிகள் நேருக்குநேர் வழிமறிப்பு தாக்குதல்களில் ஈடுபட்டால், அதனால் முன்னேறும் முனை அணிகள் சிதைய நேரிட்டால் என்ன செய்வது?
2. பெருந்தொகையான படைகள் முன்னேறிச் சென்றால் அவை நிலைகொள்ளும்பொழுது, புலிகளின் வழிமறிப்புத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுகள் என்பவற்றுக்கு மத்தியிலும் அவற்றிற்கு எவ்வாறு வழங்கலை தடையின்றி மேற்கொள்வது?

வழக்கமாக ஓரிரு கமாண்டோ பட்டாலியன்களை புலிகளின் அரண் நிலைகளை அடித்து முன்னேறுவதற்காக அனுப்பி, அதன் பின்னர் சாதாரண காலாட்படைகளை களத்தில் இறக்குவதே இரண்டாம் ஈழப்போரின் ஆரம்ப காலத்திலிருந்து சிறிலங்கா படையினர் மேற்கொண்டு வந்த வழிமுறையாகும். புலிகளின் நிலைகளை உடைப்பதற்கும், உட்புகுவதற்கும் பயன்படுத்தப்பட்ட விசேட அணிகளின் அளவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சூட்டாதரவின் செறிவும் ஆண்டுக்கு ஆண்டு கூடிச் சென்றனவே ஒழிய, அடிப்படை தந்திரோபாயத்தில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. சிறிலங்கா படைத்துறை அதிரடிப்படை அணிகளை முன் அனுப்பி, காலாட்படை அணிகளைப் பின் அனுப்பும் தந்திரோபாயத்தில் காலத்திற்குக் காலம் சில அமைப்பு மாற்றங்களையும் (Tactical infantry formations) முன்னேறும் அணிகளுக்கான சூட்டாதரவு வழங்கும் முறைகளில் சில மாற்றங்களையும் மேலைத்தேய காலாட்படை போரியல் நெறிகளுக்கு அமைய செய்து பார்த்தது. எனினும், புலிகள் இவற்றிற்கு மாற்று வழிகளை உடனுக்குடன் ஆராய்ந்து செய்தே வந்துள்ளனர்.

ஆகவே, ஈழத்தின் களமுனைகளைப் பொறுத்தவரையில் மரபுவழி படை நகர்வுகளின் முப்பரிமாணத்தின் அடிப்படையிலேயே அனைத்து படை நகர்த்தல்களையும் செய்ய வேண்டிய நிலைக்கு சிறிலங்கா படைத்துறை 1996க்குப் பின் நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டது. அதாவது, இலக்கை நோக்கிய சூட்டுச் செறிவு, அதைத் தொடர்ந்து முனை அணிகளின் (Spearheads) முன் நகர்வு அதன்பின் காலாட்படைகள் பின்சென்று நிலைகளைப் பலப்படுத்தல் என்ற அடிப்படையில் அமைந்த மரபுவழி போர்க்களங்களின் முப்பரிமாணத்தை அடிப்படையாகக் கொண்டே, தனது தாக்குதல் திட்டங்களை வகுக்க வேண்டிய கட்டாயம் இன்று சிறிலங்கா படைத்துறைக்கு.

முதலாம், இரண்டாம் உலகப் போரின் பல களமுனைகளில் சூட்டுச் செறிவென்பதே

மேற்படி மூன்று அம்சங்களில் பிரதானமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி மிகச் செறிவாக எறிகணைகளையும், குண்டுகளையும் இடைவிடாது வீசி அங்கு ஒரு புல்பூண்டுகூட இல்லாமல் அழிப்பதை stonking என்று அழைத்தார்கள். மூன்றாம் ஈழப்போரில் தனது முனை அணிகளாக இயங்கிய 53வது டிவிசன் தொடர்ச்சியாக ஏகப்பட்ட இழப்புகளைச் சந்தித்து வந்த காரணத்தாலும், அந்த அணிக்கு ஆள் திரட்டுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை கைப்பற்றும் படை நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் மேற்படி மூன்று அம்சங்களில் சூட்டுச் செறிவையே பிரதானமாக நம்பவேண்டிய நிலைக்கு சிறீலங்கா படைத்துறை தள்ளப்பட்டுள்ளது.

சூட்டுச்செறிவை இரண்டாம் உலகப் போர்முனைகள், வடகொரியாவில் நடைபெற்ற அமெரிக்க சீன யுத்தம் போன்றவற்றில் காணப்பட்டதைப் போன்று மிகை அதிகரிப்பு செய்தால் மேற்படி சிக்கலுக்கு தீர்வு கண்டுவிடலாம் என்று ஆனையிறவை நோக்கிய அக்னி கீல (தீச்சுவாலை) படை நகர்வுகளை திட்டமிட்டவர்களும் அவர்களுக்குப் பின்னணி ஆலோசனை வழங்கிய அமெரிக்க, பிரித்தானிய படைத்துறையினரும், நம்பினார்கள்.

இதனடிப்படையிலேயே, சூட்டுச்செறிவை மிகை அதிகரிப்புச் செய்யக்கூடிய அனைத்துக் கொள்வனவுகளுக்கும், தயாரிப்புகளுக்கும் சிறீலங்கா அரசுக்கு பல மேற்கு நாடுகளும் இந்தியாவும் பின்னணி உதவிகளை வழங்கின. உண்மையிலேயே அக்னி கீல களமுனையில் சிறீலங்கா படைத்துறையால் செறிக்கப்பட்ட சூட்டு வலுவானது, எந்தப் பலமான அரணையும் தகர்த்தழிக்கக்கூடிய ஒன்று. ஆகவே கொள்கையளவில் இந்த சூட்டுவலுவின் ஊடான அழித்தொழிப்பின் பின், ஆனையிறவை நோக்கி கட்டம் கட்டமாக நகர்வதற்கு எந்தத் தடையும் இருக்காது என்பது அனைவரின் எண்ணம்.

எதிரியின் முன்னணி அரண்களையும் பின்புல காவல் நிலைகளையும், மிகைச் சூட்டு வலுவைக் கொண்டு அழித்தால், எதிர்ப்பு குறையும் என்ற எண்ணமே அக்னி கீல நடவடிக்கையில் முதன்மை பெற்றிருந்தது. இது உலகின் நவீன மரபுவழிப் போர்முனைகள் அனைத்திலும் (நெப்போலியன் காலத்திலிருந்து இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கார்கில் மலைப்பகுதியில் நடைபெற்ற சண்டை வரையில்) இது ஒரு மாறிலியாகவே மரபுவழிப் போரியலிலும் திட்டமிடலிலும் இருந்து வருகின்றது.

மேலும் பலமான அரண்களை அமைத்தலும் அரண் வியூகங்களையும் மாற்றலும் பின்வாங்கிச் சண்டையிடலும் எதிர்ச்சூட்டு வலுவை அதிகரித்துச் செல்வதும் இதற்கு பதில் தந்திரோபாயங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால், அக்னி கீலவிற்கு எதிராக புலிகள் மேற்கொண்ட அடிப்படைத் தந்திரோபாயம் ஒரு புதிய அத்தியாயத்தை மரபுவழி போரியலில் திறந்து வைத்துள்ளது.

மேற்படி முப்பரிமாண மரபுவழி படை நகர்த்தற் தந்திரோபாயத்தை வெற்றிகரமாக எதிர் கொள்ளக் கூடிய, ஒரு புதிய பரிமாணம் கொண்ட பதில் நடவடிக்கையை புலிகள் அறிமுகப் படுத்தியுள்ளனர். அதாவது, எதிரியை வரவிடுதல், அவர்கள் வரும் வழியைச் சரியாகக் குறிவைத்து, பின்புலத்திலிருந்து எறிகணை, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்ளுதல், அதன் மூலம் அந்தப் பாதைகளை அண்டிய கண்ணிவெடி வயல்களுக்குள் அவர்களைச் சிதற வைத்தல். பின்னர் அக்கண்ணிவெடி வயல்களினூடான முன்னொழுங்கு செய்யப்பட்ட பாதைகள் வழியாக வழிமறிப்புத் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் என்ற அடிப்படையில் அமைந்த புலிகளின் எதிர் தந்திரோபாயத்தை யாராவது இதற்கு முன்னர் கையாண்டிருக்கின்றார்களா என நான் கடந்த ஒருவாரகாலமாக போரியல் வரலாற்று நூல்களை தட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இன்னும் மறுமொழி கிடைக்கவில்லை.

(பிரபல இராணுவ ஆய்வாளர் டி.சிவராம்)

நன்றி: ஈழமுரசு